

"காலாபாணி" – நாவலுக்குச் சாகித்திய அகாடமி விருது

டாக்டர். **மு. இராஜேந்திரன், இ.ஆ.ப.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. **மு. இராஜேந்திரன்,** இ.ஆ.ப. |
| ஊர் | : | மதுரை, திருமங்கலம் |
| கல்வி | : | தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்<br>முனைவர் பட்டம் பெற்றவர் |
| எழுதிய நூல்கள் | : | பதானி ( சிறுகதைத் தொகுப்பு )<br>காலாபாணி, மதாம், வடகரை (1801) புதினங்கள்<br>செயலே சிறந்த சொல் ( தன் வரலாறு) |
| பணிகள் | : | வழக்கறிஞர்<br>திருவண்ணாமலை ஆட்சியர்<br>தமிழக வேளாண் துறை ஆணையர்<br>பிற்படுத்தப்பட்ட நலத்துறை ஆணையர் |
| விருதுகள் | : | சாகித்திய அகாடமி விருது<br>புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது<br>சிலம்புச் செல்வர் இலக்கிய விருது |

கிருஷ்ணா பிரிண்டர்ஸ்

# தமிழ்ச்சோலை

அரையாண்டிதழ் மாணாக்கர் வெளியீடு

மலர் : 13 மார்ச் 2023 அரும்பு : 23




**தமிழாய்வுத்துறை**

**காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**

(தேசியத் தர நிர்ணயக் குழுவால் (மூன்றாம் சுற்று) 'A' தகுதி பெற்றது)

ISO 9001 : 2015 சான்றளிக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி – 18.

## ஆசிரியர் குழு

முனைவர் ச. இராமலட்சுமி

முனைவர் அ. யசோதா

முனைவர்  மா. ஆசியாதாரா

முனைவர் மு. ஜெயலெட்சுமி

திருமதி. பொ. அபிராமி

## பொன்மொழிகள்

திறமையானவர்கள்

சந்தர்ப்பத்திற்குக் காத்திருப்பதில்லை

அவர்களே சந்தர்ப்பத்தை உருவாக்குகிறார்கள்

ஒரு முயற்சி நிறுத்தப்படும்போது

தோல்வியாகிறது.

தொடரப்படும்போது

வெற்றியாகிறது.

– பனித்துளி சங்கர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கவிதைகள் | 3 - 10 |
| 2. | சிறுகதைகள் | 11 - 18 |
| 3. | கட்டுரைகள் | 19 - 30 |
| 4. | பொது அறிவு | 31 - 32 |
| 5. | விடுகதைகள் | 33 - 36 |
| 6. | பழமொழிகள் | 36 |
| 7. | தெரிந்துகொள்வோம் | 37 - 39 |
| 8. | சிந்தனைத்துளிகள் | 40 |
| 9. | பொன்மொழிகள் | 41 |
| 10. | தகவல் களஞ்சியம் | 42- 44 |
| 11. | ஓவியங்கள் | 45 - 52 |



# நல்வரவு

# பாதையும் பயணமும்
# ( முன்னோக்கிச் செல் )

காலை முதல் மாலை வரை நடக்கும் பாதையில்
காலையில் வெயில் அடித்தாலும்
மாலை இருள் வரத்தான் செய்யும்
இருள் வருதே என்று பயணத்தை
முடித்தால் நீ முட்டாள் என்று அர்த்தம்
அதே இருளை மறந்து உன் பாதையில்
வெளிச்சம் கொண்டு வந்து பயணத்தைத்
தொடர்ந்தால் அந்தப் பயணம் தொடரும்
தொடர்ந்து கொண்டே இருக்கும் ஏனென்றால்
நம் வாழ்வில் பாதை முடிந்தாலும் பயணம் முடியாது
பயணம் முடிந்தால் வாழ்வே முடியும்
வாழ்க்கைப் பயணம் தொடர பாதை கரடுமுரடாக
இருந்தாலும் வெற்றி காணும் வரை
பாதையில் பயணத்தைத் தொடர்க.



**ஸ். பிரித்திகா நான்ஸி**

*இளநிலை முதலாமாண்டு ஆங்கிலம்*

# அப்பா

ஆயிரம் உறவுகள்
அருகில் இருந்தாலும்
உன்னைப் போல் யாராலும்
அன்பு காட்ட முடியாது...
எந்தன் முதல் நாயகனும் நீ
என்னைப் பாதுகாக்கும் காவலனும் நீ...



காலங்கள் கடந்து போனாலும்
உன் கண்களில் ஒருநாளும்
கண்ணீரைப் பார்த்ததில்லை...
“ஆயிரம் கஷ்டங்கள் வந்தாலும்
கஷ்டமே தெரியாமல் வளர்க்க
உன்னைத் தவிர
வேறு யாருமில்லை”
மணம் முடிந்த மறுநிமிடம்
மகளைப் பிரியும்போது மனம் உடைந்துபோகும்
கடவுள் கொடுத்த வரம் அல்ல நீ ...!
கடவுளே தந்தையாக வந்த வரம் நீ ...!
கடவுளுக்காகக் கவிதை எழுத
நான் ஒன்றும் கவிஞன் அல்ல ...

**ம. சரண்யா**
*இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியியல்*

## தாயின் மகள்



சுமையாய் இருந்தாலும்
சுகமாய்ச் சுமந்தவளே !
பாரமாய் இருந்த என்னை
பார் ஆளச் செய்தவளே !
தோல் கிழித்து என்னைப் பெற்றவளே
என் தோழியாய் ஆனவளே !
தவமிருந்து என்னைப் பெற்றவளே !
எனக்கு வரமாய்க் கிடைத்தவளே !
ஆம், எனக்கு வாழ்க்கை தந்தவளே
என் அன்னையே.....
உன்னையே எண்ணும் உன் மகள்.

**பெ. சிந்தியா**
*இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்*

## இரவு அழிவின் தொடக்கம்

பதவிக்கு வருவதற்காகப் பல பொய்கள்
சொல்லி பச்சோந்தித் தனமெடுத்து
பாசாங்கு செய்வோர் இழிவு ...

விதவைக்கு வாழ்வென்று வீராய்ப்பாய்ப் பேசி
வீணர்கள் சகுனமென விழிகாணல் இழிவு ...

முதியோர் இல்லத்தில் மாதாவை விட்டு
மனைவியுடன் இல்லறத்தில் மகிழ்வது இழிவு ...

பரத்தைக்குக் கண்மூடி பணம் அள்ளிக் கொடுத்து
பத்தினிகளைப் பரிதவிக்க விடுவது இழிவு ...

கட்டாயம் தருவதாகக் கைமாறு பெற்று
காரணம் பலசொல்லிக் கைகழுவுதல் இழிவு ...

மட்டமென அடுத்தவரை மனம்
போக்கில் திட்டி தோள்தட்டிக்
கொள்வது மனிதர்களின் இழிவு ...

இழிவு அழிவின் முடிவு ....

**ச. சக்திபிரியா**
*முதுநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்*

## வானும் மழலையும்



வறண்ட நிலத்தில் நீரைப்
பார்க்க !
ஏங்கும் மழலையிடம்
நீ சிரிக்க !
நான் அழுகிறேன் ! என்றது வானம்

## வாழ்க்கை



நிலையில்லா நிழலை நிஜமாய்
நம்பி
காலமெல்லாம் காத்திருக்கும்
கானல் நீர் ... வாழ்க்கை

**பா. சாரணி**
*முதுநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்.*

## விவசாயம்



அதிகாலை கதிரவனை வணங்கி உழவன் ஒருவன்
ஆனந்தமாய்ப் பிறப்பெடுத்து
இனிமை தரும் விதையை
ஈன்றெடுத்து
உள்ளம் நிறைய
ஊக்கத்துடன்
எட்டு திசையும் வணங்கி
ஏர்க் கலப்பையில் நிலம் ஓட்டி
ஐயமின்றி விதை விதைத்து
ஒருவேளை உணவிற்கு
ஓராயிரம் நெற்கதிரை
நெல் மணிகளாய் மாற்றித் தருபவன் விவசாயி ..
அஃதே வாழ்பவன் விவசாயி ...

**ரா. காமினி**
*இளநிலை இரண்டாமாண்டு தகவல் தொழில்நுட்பவியல்*

## அம்மா



நான் எத்தனை முறை
உதைத்தாலும் அதை
இரசித்த ஓர் இதயம்
நீ மட்டும்தான் அம்மா
இப்படிக்கு,
நீ வடித்த சிற்பம்

தொலைதூர மகளின் ஏக்கம் ! அப்பா,
வெளிநாட்டில் இருக்கும் தந்தையின்
அன்பை எதிர்பார்த்துக் காத்திருக்கும்
மகளின் மனப்போராட்டம் உலகத்தில்
நடக்கும் உலகப்போராட்டத்தை விட பெரியது
இப்படிக்கு,
எதிர்பார்த்துக் காத்திருக்கும்
உன் அன்பு மகள் ...

**சு. யுவஸ்ரீ**
*இளநிலை முதலாமாண்டு கணினி அறிவாற்றல்*

## கல்வி



பெண்ணாகப் பிறந்தவள்
ஒவ்வொரு காலக்கட்டத்திலும்
ஒவ்வொன்றை இழக்கிறாள்
ஆனால் இழக்காத ஒன்று
கல்வி தான் !
ஒரு பெண்
அம்மா, அப்பா, உடன்பிறப்பு என்பது
புகுந்த வீடு செல்லும் வரை !
நட்பு என்பது படிக்கும் வரை !
கல்வி தான் கடைசி வரை !

## தோழி



ஒரு பெண்
தன் தாயிடம் உடல் மாற்றத்தையும்
தந்தையிடம் வெளிப்பிரச்சினையும்
சொல்ல முடியும்
ஆனால் தாய், தந்தையிடம் சொல்லமுடியாத
எல்லாவற்றையும் தன்
தோழியிடம் மட்டும் தான் சொல்ல முடியும்.

**ம. சுலோச்சனா**
*இளநிலை முதலாமாண்டு கணினி அறிவாற்றல்*

## முயற்சி



மனிதனே ! மகத்தான சாதனை
மண்ணில் படைக்க
முயற்சி செய் தன்னம்பிக்கையோடு
முயன்றால் முடியாதது எதுவுமில்லை...
தோல்வி என்றாலும் வெற்றி என்றாலும்
முயற்சி செய் முன்னோக்கிச் செல்ல...
வெற்றி புகழைக் கொடுக்கலாம்
ஆனால் அனுபவத்தைக் கொடுக்காது
தோல்வியானது பல அனுபவங்களோடு
புதிய பாடங்களையும் கற்றுத் தரும் !
முயற்சி செய் பல தடைகள் வரலாம்
துணிவோடு அதனைத் தகர்த்தெறிந்து போராடு
உனக்கான புகழும் வெற்றியும்
உன்னை நோக்கி வரும் !
மனிதனே ... முயற்சி செய்து வாழ்
தடைகள் நிறைந்த மண்ணில்
சரித்திரம் படைக்க !

**சே. காயத்ரி**
*முதுநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்*

**கவிதைகள்**

# தாயே தமிழே

எல்லாம் தெரிந்தும் ஏனோ மருண்டு
திறமைதனை வெளிகாட்ட தயங்கிய என்னை
அன்னையென ஏந்தி அன்பாய் அழகாய்
அண்டத்தைக் காண நான் துணையிருக்கிறேன்
என வந்த என் தாயே தமிழே !!!

உன்னாலே நான் பாடினேன்
உன்னாலே நான் எழுதினேன்
அத்தனையும் கவிதைகளாய் மாற !
நீ இல்லாமல் என்னை அறிந்தவர் யாருமில்லை

எழுந்தேன் தமிழாலே !
எழுதினேன் தமிழாலே !
எல்லாம் உன்னாலே !
கற்றேன் தன்னாலே !




கண்ணாலே உன்னைக் கண்டேன்
கண்ணாக என்னைக் காத்தாய் !
சொல்லாக உனைக் கூற
சொற்பொழிவாக நான் மாற !
பிறந்ததால் பெற்றேன் உனை என நான் நினைத்தேன்

என் கண்முன்னே என்னைப் புதிதாகப்
பிறக்க வைத்தது நீயேதான் என்பதனை
அதன்பின்னே நான் அறிந்தேன்
உன்னை எண்ணி வியந்தேன் ! சிலிர்த்தேன் !

தென்னகத்தின் மொழியான உன்னை
தேன்மொழி என அறிந்தே
கற்கத் துடித்தேன் நீயோ !
கடலினும் மிகப்பெரியது, ஆயின்
என்செய்வேன் என்று விழிக்கிறேன்
இன்னும் உன்னைக் கண்டு வியக்கிறேன்
“கற்றது கையளவு கல்லாதது உலகளவு”
எனும் பழமொழியை நோக்கி ...


**இ. வாசுகி**
*இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல்*

# அம்மா

உன்னைப் போலப் பேசிச் சிரித்தேன்
ஏனோ தெரியவில்லை கண்ணின் ஓரத்தில் கண்ணீர்த் துளிகள்

தொலைவிலே உன் ஞாபகமாய்
தொலைகிறேன் உன் நினைவுகளால்

சரிக்கிவிட்ட கால்கள் போல
சரியுதே மனமே இங்கு

பதறிய நெல் மணி போல
பதறுகிறேன் உன்னை மட்டும் நினைத்து

நெருங்கிய உன்னுடன் வாழ
நொடிகளும் உன்னுடன் துரத்தும்

இதயமும் வலிக்கிறது
இமையும் சிவக்கிறது

ஏனோ என்று தெரியவில்லை
நீ பிரிவாய் என்று புரியவில்லை

மறக்க நினைக்கிறேன் மனது வலிக்கிறது
நினைக்க நினைக்கிறேன் நிஜமும் தொலைகிறது

நீ என் மடியில் சாய்ந்தால்
என் கோபம் இறங்கும்
உன் தலையைக் கோத
உன் புன்னகை ஒன்றே போதும் அம்மா
ஒரு ஜென்மம் வாழ்வேன் உன் புன்னகையில் ...

**செ. அபிராமி**
*இளநிலை முதலாமாண்டு வணிகவியல்*

காலை பெரியவரைச் சந்தித்தனர். மூத்தவனைப் பெரியவர் அழைத்து, "என் புதிருக்கு விடை சொல்" என்றார். அண்ணன் அவரிடம் பெரியவரே! "ஒரு மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது?" என்று கேட்டீர்கள். அதற்குச் சரியான விடை "அறுசுவை உணவு சாப்பிட்டால் வயிறு நிரம்பும். பல மணி நேரம் பசிக்காது."

இரண்டாவது புதிருக்கு விடை, "மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருவது எது?" என்றார். அதற்கு விடை, "பணம், பணம் பெட்டி நிறைய இருக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது தெரியுமா? பணம் குறையக் குறைய மகிழ்ச்சியும் குறையும்". மூன்றாவதாக "அதி விரைவாகச் செல்வது எது?" என்றார். "வேட்டை நாய், வேட்டை நாய்கள் விரைவாக ஓடி, முயல்களைக் கூட பிடித்து விடுகின்றனவே" என்று சொல்லிவிட்டுப் பெரியவரைப் பார்த்து, "பசு எனக்குத்தானே" என்று கேட்டான். 'மூத்தவனே நீ கூறிய அனைத்துப் பதில்களும் தவறு' என்றார்.

இளையவன் அழைக்கப்பட்டான், அவன் பெரியவரைப் பார்த்து, "நம் வயிற்றை நிரப்புவது பூமி. பூமித்தாயிடம் தான் நாம் உண்ணும் தானியங்களும், கிழங்குகளும் கிடைக்கின்றன. அதில்தான் விலங்குகளும் பறவைகளும் வாழ்கின்றன". 2-வது "மனிதனுக்கு அதிக மகிழ்ச்சி தருவது தூக்கம். தூக்கத்திற்காக விலையுயர்ந்த செல்வத்தையும் மனிதன் விட்டுவிடுகிறான்". 3-வது "அதிவிரைவாக செல்வது நமது சிந்தனை ஓட்டம், அது நாம் விரும்பியபோது, விரும்பிய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன" என்றான்.

'ஆஹா! சரியான விடைகள். இந்தப் பசு உனக்குத்தான்' என்று கூறினார். பசுவினைக் கொடுத்தபின் பெரியவர் கேட்டார். "இந்தப் புதிர்களுக்கு உனக்கு யார்? விடை கூறியது" என்றார்.

"என் மகள்", கவின்நிலா

"அவள் என்ன அவ்வளவு புத்திசாலியா?" என்று கேட்டார். "ஏதோ கொஞ்சம்," என்றான் இளையவன்.

அப்படியா! என் அளவிற்கு அவளுக்கு அறிவு இருக்கிறதா?

என்பதை ஆராய்ந்து பார்த்து விடுகிறேன்? என்று பெரியவர் பத்து அவித்த முட்டைகளை அவனிடம் கொடுத்து, "இதோ, இந்தப் பத்து அவித்த முட்டைகளையும் உன் மகளிடம் கொடுத்து, ஒரு கோழியினால் அடைகாக்க வைத்து, பத்துக் குஞ்சுகளை ஓர் இரவுக்குள் பொரிக்க வைத்து, அதே குஞ்சுகளை, அதே இரவில் கோழியாக்கி முட்டை போட வைத்து, பத்து முட்டைகளில் மூன்றை எடுத்து அடையாக்கி நாளை காலை உணவு எனக்குக் கொண்டு வா" என்றார். தன் மகள் கவின்நிலாவிடம் சென்று பெரியவர் கூறியதை அப்படியே சொன்னான்.

தன் மகள் இந்தப் புதிருக்கு விடை எப்படிச் சொல்லப்போகிறாள் என்று கவலைப்பட்டான். ஆனால் அவளோ எதிர் புதிர் போட்டாள். தன் தந்தையிடம், "வேகவைத்த துவரைகள் அடங்கிய ஒரு பானையைக் கொடுத்து, இதில் உள்ள துவரையை நிலத்தில் விதைத்து முற்றியவுடன் அறுத்து எனது கோழி குஞ்சுகளுக்கு உணவாகத் தயாராக வைக்கும்படி பெரியவரிடம் கூறுங்கள்", என்றாள் கவின்நிலா. அவருடைய தந்தையும் அவ்வாறே பெரியவரிடம் சென்று கூறினார்.

துவரையைப் பார்த்த பெரியவர் அவற்றை நாய்க்குப் போட்டுவிட்டு, "கணல்கண்டு ஒன்றைக் கொடுத்து, இதை ஊறவைத்து, காயவைத்து நல்ல தரமான துணி தயாரிக்கச் சொல்" என்றார். ஆனால் அவளோ, அதற்குப் பதிலாக மிக மெல்லிய குச்சி ஒன்றைக் கொடுத்து, "இதிலிருந்து நூலை நூற்பதற்கு ஓர் இராட்டை செய்து தரும்படி கூறுங்கள்" என்றாள். அவளது அறிவின் ஆழத்தைக் கண்ட பெரியவர், "உன் மகளை நாளை வந்து என்னை பார்க்கச்சொல். ஆனால், அவள் நடக்கவோ சவாரி செய்யவோ கூடாது வெறுங்காலுடனோ செருப்புடனோ வரக்கூடாது. பரிசுடனோ, பரிசின்றியோ வரக்கூடாது இது கடுமையான உத்தரவு!" என்றார்.

மறுநாள், பனிச்சறுக்கு வண்டியில் வெள்ளாடுகளைப் பூட்டி, ஒரு காலில் மட்டும் செருப்பு அணிந்து, முயல் ஒன்றைத் தெரியும் படியும் சிட்டுக்குருவி ஒன்றைத் தெரியாமலும் எடுத்துச் சென்றாள். அவள்

மிகுந்த புத்திசாலித்தனத்துடன் வருவதைக் கண்ட பெரியவர் அவள் மீது நாய்களை ஏவினார். பதிலுக்கு இவள் முயலை வெளியே விட நாய்கள் முயலைத் துரத்தின. "இதோ உங்களுக்கு ஒரு சிறிய பரிசு என்று சிட்டுக்குருவியைக் கொடுத்தாள். அது அவரது கையில் சிக்காமல் பறந்து விட்டது. தான் சொல்லியபடியே வந்துவிட்ட அவளை நினைத்துப் பெருமைப்பட்டார் பெரியவர். கவின்நிலா, "நீ புத்திசாலிதான்" என்று பாராட்டினார். அவளுக்குப் பரிசுகள் அளித்து அனுப்பி வைத்தார்.

"வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு
வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்."

**சு. பத்மா**
*இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# பெற்றோர்களின் அன்பு



அமுதா இருபது ஆண்டுகளாகக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார். ஒரு காலை நேரம் கல்லூரிக்குச் செல்லும்முன் தன் ஆதார்அட்டை நகல் எடுப்பதற்காகக் கடைக்குச் சென்றார். அங்கு ஒரு இருபத்தி இரண்டு வயது பெண் ஒருவர் வேலை செய்து கொண்டிருந்தார். உடன் ஒரு வயது கைக்குழந்தையும் இருந்தது. அது எங்கோ பார்த்த பெண் போன்று தோன்றியது அமுதாவிற்கு, சிறிது நேரம் கழித்து அந்தப் பெண்ணே, தயக்கத்துடன் வந்து தன்னை அமுதாவிடம் நினைவுபடுத்தினாள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அமுதாவுடைய வகுப்பில் பயின்ற மாணவி மலர்விழி. பெயர்க்கேற்றாற்போலப் புற அழகும் உடையவள். தந்தை விவசாயி. தாய் தையல் தொழில் செய்பவர். அவளுக்கு ஒரு தம்பி என அளவான நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். இப்போது தான் அமுதாவிற்கு நன்கு அடையாளம் தெரிந்தது. ஓராண்டுக்கு முன் அவளுடைய கணவன் விபத்தில் உயிரிழந்துவிட்டான் என்றும்,

அவர்கள் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டதால் கணவன் வீட்டிலிருந்து விரட்டி விட்டனர் என்றும் தெரியவந்தது. அமுதா அவளுடைய தந்தை வீட்டிற்குச் செல்லலாமே என்றதற்கு அமைதியானாள். பின் நேரமானதால் அமுதா அங்கிருந்து சென்று விட்டாள். அமுதா கல்லூரிக்கு வந்ததும் மலர்விழியின் வகுப்பாசிரியராகப் பணியாற்றியவரிடம் நடந்ததைக் கூறினாள். அப்போது தான் அவர் அமுதாவிடம், 'அவள் நல்ல மாணவி தான். கல்லூரி இரண்டாமாண்டு பயிலும் போதே தன் பெற்றோர் சம்மதமின்றித் திருமணம் செய்து கொண்டாள். திருமணம் நடந்த அன்று மாலை கூட அவர்கள் பெற்றோர் காவல்நிலையத்தில் காலில் விழுந்து தங்களுடன் வருமாறு கூறினர். ஆனால் அவள் தன் பெற்றோரை நம்பவில்லை. அவள் திருமணம் செய்த இரண்டு மாதத்தில் அவளுடைய தந்தை இறந்துவிட்டார். இதைக் கேட்டதும் அமுதாவிற்கு இதயம் கனமானது. புறஅழகைப் பார்த்து, மனம் மகிழப் பேசி ஒரு வாரமோ ஒரு வருடமோ வந்தது புனிதமான காதல் என்றால் சிறு கருவாய் உருவம் கொண்டு முதல் நாளிலிருந்து பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து தன் உயிரையும் பணயம் வைத்து பிறந்த பிறகு அவளுக்காக இருபது ஆண்டுகள் கனவுகளோடு வளர்த்த தாய், தந்தையின் அன்பு எவ்வளவு அப்பழுக்கற்றது. அதை ஏன் வளரும் பெண்கள் புரிந்து கொள்ளவில்லை என்ற கோபம் அமுதாவிற்குள் கேள்வி வந்தது.

இருப்பினும்,,கைக்குழந்தையுடன் அவளைப் பார்க்கும்போது மனம் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பிறகு, அமுதா சென்று மலர்விழியின் தாயிடமும், தம்பியிடமும் பேசினாள். மலர்விழியின் நிலையைக் கேட்டதும் அவளுடைய தாய் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. தம்பியோ வழியும் கண்ணீரை அடக்க முடியாமல் தாயைப் பார்த்து அமைதியாக நின்றான். பின் அமுதா சென்று மலர்விழியை, அவளுடைய தாய் வீட்டிற்கு அழைத்து வந்தாள். அவளுடைய அம்மாவும் தம்பியும் எதுவும் கேட்கவில்லை. மலர்விழி நேராக தன் தாயின் காலில் விழுந்தாள். அவளது கண்ணீர்த்துளிகள், தாயின் காலில் பட்டுச் செய்த பாவங்கள் கரைந்து கொண்டிருந்தது. பிறகு அமுதா, மலர்விழியிடம் நாளையிலிருந்து கல்லூரிக்கு

வருமாறு கூறினாள்.

கல்வியை விட உற்ற துணை எதுவும் கிடையாது. இனிமேலாவது பெற்றோரை நம்பு ! என்று கூறி அமுதா விடைபெற்றாள். அடுத்த நாளிலிருந்து மலர்விழி கல்லூரிக்குச் சென்று படிக்க ஆரம்பித்தாள்.

**ரா. காவியதர்ஷினி**

*இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்*

## குறி



அன்று விடுமுறை, என்பதால் தன் மகன் ரகுவை அழைத்துக்கொண்டு வேட்டைக்குப் போகத் தீர்மானித்தான் அரவிந்தன்.

துப்பாக்கியைத் துடைத்தவாறு, “ரகு இன்று நீயே சுட வேண்டும் நான் தூரத்தில் நின்று வேடிக்கை பார்ப்பேன்” என்றான் அரவிந்தன்.

வால்பாறை எஸ்டேட்டிலிருந்து விலகி இருந்தது. அந்த அடர்த்தியான காடு. ஏராளமான மரங்களும் புதர்களும் சூழ ஜில்லென்று இயற்கை மணத்துடன் காற்று வீச, இருவரும் உள்ளே நுழைந்தனர்.

சிறிது தூரம் சென்றவுடன் திடீரென்று நின்ற அரவிந்தன், “ரகு அதோ பார் அந்த குருவியைப் பார்த்து சுடு“ என்றான்.

துப்பாக்கியை ஏந்தியவாறு ரகு “சரிப்பா“ என்றவன், “அப்பா அந்த குருவியைச் சுடட்டுமா அல்லது அதற்குப் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கிற மாங்காயைச் சுடட்டுமா?” என்றான்.

“ஏன் அப்படி கேட்கிறாய்?“

குறி பார்த்து சுடப் பழகுவதற்கு, “ஒரு குருவியைக் கொல்லத்தான் வேண்டுமா? என்றான் ரகு.

“சுருக்” கென்றது அரவிந்தனுக்கு.

**கு. சுவாதி**

*இளநிலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

# விடுதியில் ஒரு நாள்

“காலேஜ் போகணும் சீக்கிரம் எழுந்திரு” என்னும் குரலோடு ஆரம்பமாகும் கல்லூரி விடுதி மாணவிகளின் நாள். போருக்குப் போவது போல் அடிச்சிப் புடிச்சிகிட்டுக் குளிக்க இடம்போட்டு குளித்து முடிப்பதற்குள் ஆயிரம் தடவையாவது “வெளியே வா நேரம் ஆச்சு” என்னும் குரல். அப்பாடியோ! என்று ஓய்வதற்குள் சாப்பாட்டிற்குத் தட்டைத் தூக்கிக்கொண்டு ஓட்டம், போடுவது வெண்ணெயாக இருந்தாலும் சரி, வேப்பெண்ணெயாக இருந்தாலும் சரி, எதுவானாலும் வாயில் போட்டுக்கொண்டு, கிடு, கிடுவென கிளம்புவதற்குள் முதல் அபாய மணி அடித்துவிடும்.



இரண்டாவது மணி அடிப்பதற்குள் கதவு பூட்டும் விவாதத்தை முடித்து விட்டு, விடுதியை விட்டு வெளியே வந்தால், வகுப்பில் தேர்வு இருப்பதை மறந்து டேபிள் டேபிளாகப் பேப்பர் கடன் வாங்கி வைத்தாள், கடைசியில் வேறு வேலை இருக்கு என்று ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை, வேறு என்ன விளையாட்டுதான்! கடன் வாங்கின பேப்பரையும் அதைக் கொடுத்தவங்களையும் வைத்து விளையாடி விட்டு! ஒரு வழியாக மதிய சாப்பாட்டு மணி, காலையில் நடந்த அதே போர்க்களம் தான் மதிய சாப்பிட்டிற்கும்.

அங்கு, போடுவது சாம்பாராக இருந்தாலும், திரும்பவும் காலேஜ்

சென்றால் மதிய வகுப்பு, மதிய வகுப்பு என்றாலே மேசையில் தூங்கும் வகுப்பு, என்ன சொன்னாலும் ஏறாது மண்டைக்கு, கடைசி வகுப்பில் விளையாடிவிட்டு பக்கத்து வகுப்பு ஆசிரியரிடம் திட்டு வாங்கிவிட்டு, ஒரு வழியாக விடுதிக்குச் செல்லும் மணி அடித்தது. அடுத்த வேளை துணி துவைக்கக் கல்லைப் பிடித்துக் கூடவந்தவளுக்கும் பிடித்துக் கொடுத்து துவைத்துவிட்டுவந்தால், அடுத்தே ஆரம்பமாகும் கொடி சண்டை.

அதையும் தாண்டி கொடியில் துணியைக் காய வைத்து விட்டு வந்து, அப்பாடியோ! என்பதற்குள் நேரம் ஓடிவிடும், அடுத்து விடுதி படிப்பு நேரம். அதிலும் கேலியும் கிண்டலும் பண்ணி விளையாடி மாட்டிக்கொண்டு வராண்டாவில் பனிஸ்மண்டு வாங்கி நிற்பேன். இரவு சாப்பாட்டு மணி அடித்ததும், வரிசையில் நின்று வாங்கி சாப்பிட்டு விட்டு வந்து, அலைபேசியில் நேரத்தை ஓட்டிவிட்டு படுத்தால் விடிவது தெரியாமல் விடிந்து விடும். மீண்டும் போர்க்களத்துக்குத் தயாராகும் விடுதிப் போர்வீராங்கனைகள்.



“கல்லூரிக் காலம் மூன்று ஆண்டுகளானாலும் அதன் நினைவுகள் முப்பது ஆண்டுகளானாலும் சிரிப்பூட்டும் நிகழ்வுகளாக என்றும் நெஞ்சில் நிலைத்து இருக்கும்.”

**வி. சத்தியவாணி**

*இளநிலை இரண்டாமாண்டு கணினியியல்*

கட்டுரைகள்

# என் அப்பா

## குறிப்புச்சட்டம்



**முதல் அறிமுகம்**
**தாயாய் உதித்தாய்**
**ஆசானாய் கண்டித்தாய்**
**தோழனாய் கண்டித்தாய்**
**பாதுகாவலனாய் காக்கிறாய்**
**நாயகனாய் என்னுள்**
**முடிவுரை**

**முதல் அறிமுகம் :**

என் வாழ்க்கையின் முதல் வடிவமும், முடிவின் தொடக்கமும் நீ. அனைத்தையும் உன்னிடத்தில் கற்றேன். அழகான உணர்வுகள் அனைத்தையும் உன்னிலே உணர்ந்தேன். உன்னை வர்ணிக்கவும், வார்த்தைகளே குழம்பிப் போகிறதே...

**தாயாய் உதித்தாய் :**

தாயின் அன்பையும் சேர்த்தே உன்னிடத்தில் அடைந்தேன் இரட்டிப்பாய்.,

**உன்னுடைய கைக்குள் நான் இல்லை**
**என்னுடைய கைக்குள் தான் நீ இருக்கிறாய்,**

அரவணைத்தாய், அற்புதமாக்கினாய் முதல் துடிப்பிலேயே, என்னை சிறுவயதில் கவனித்துக் கொள்ளவில்லை என்று அம்மாவின் வார்த்தையில் அதிக முறை கேட்டிருக்கிறேன். ஒருவேளை என்னைப் பிடிக்காமல் இருக்குமோ எனவும் எண்ணி என்னைப் படைத்த இறைவனுக்கு அதிக நன்றிகளைச் சொல்ல வேண்டியவளாய் மாறிப்போனேன் உன்னாலே; நீ எனக்கு தந்தையாகக் கிடைத்ததற்கு நான் பாக்கிய சாலி, “ இவரு தான் என் அப்பா” என அனைவரிடமும் சொல்லும்போது ஏதோ ஒரு வித புன்னகையை உன்னிடத்தில் காண்கிறேன் குழந்தைத்தனமாய் ஒவ்வொருமுறையும்.

**ஆசானாய் கண்டித்தாய் :**

உன்னுடைய அன்பிற்கும், கண்டிப்பிற்கும் அடிமையாகிப் போனேன். சிறிய தவறினைச் சிறிய அதட்டலோடு சுட்டிக்காட்டித் திருத்துகிறாய் கோபம் இல்லாமல், கொஞ்சம் பெரிய தவறுகளைக் கோலால் அடித்தே திருத்துகிறாய் கோபத்தோடு, தவறினைச் செய்யத் துணிகையில் உன் கோபமான கண்களை நினைத்து அடங்கிப்போகிறேன் நான் உன் மகளாய் !

உன்னுடைய கோபத்திற்கும், வருத்தத்திற்கும் அஞ்சியே ஒரு தவறினை உன்னிடம் தெரிவிக்காமலேயே உன்னைச் சுற்றி வருகிறேன் பயத்தோடு,

**"சில நேரங்களில் பகைவனைப் போல தெரிந்தாலும்,**

**உனது பாசத்தை மிஞ்சிட யாரும் இல்லை இவ்வுலகில்"..**

**தோழனாய் அணைத்து கொண்டாய் :**

இந்த இடத்தில் உண்மையிலேயே நான் கொடுத்து வைத்தவள். அப்பாக்கள் நண்பர்கள் ஆவதுண்டு, ஆனால் நீ உன்னுடைய உண்மையாளனைத் தொலைத்து; சண்டையிட்டு, கதைகள் பேசி, அழுகையின் கண்ணீரைப் பகிர்ந்து என்னுடனே இணைந்து போகிறாய் நீ... பள்ளிப்பருவத்தில் அதிக நேரத்தை உன்னுடன் பகிர்ந்து அலாதியான இன்பத்தை அடைந்தேன். ஆனால், இன்று தொலைதூர விடுதி காலத்தில், நீ எங்கோ நான் எங்கோ என்ற தொலைவில் உன்னுடைய நேரத்தையும், என்னுடைய நேரத்தையும் பகிர்ந்து கொள்ள இயலாமல் தவிக்கிறேன்.

**"கடவுள் அளித்த வரம் கிடைக்கவில்லை,**

**கடவுளே கிடைத்தார் வரமாக".**

என் அனைத்துத் தருணத்திலும் உன் இன்மையை உணர்கிறேன். நண்பனாகக் கிடைத்த ஆறாம் விரல் நீ ; பிரிய மாட்டேன் நான்,,

**பாதுகாவலனாய் காக்கிறாய் :**

என்னுடைய பாதுகாப்பு கவசம் நீ,

**உலகிலேயே மிகுந்த பாதுகாப்பு நிறைந்த இடம்,**

**உனது கைவிரல் மட்டுமே .**

உன்னிடத்தில் என்றும் பாதுகாப்பானவளாகவே உணர்கிறேன். என்ன தேவை என்பதைப் பார்த்துப் பார்த்து எனக்காகச்

செய்கிறாய், தாயை விட உன்னிடத்தில் இருக்கவே அதிகம் விரும்புகிறேன் நான். நீ அறியாத பலவற்றை நான் அறிந்து கொள்ளப் போராடுகிறாய், அதிகமாகக் கற்றுக் கொடுத்து என் அறிவினை அவிழ்க்கிறாய். எனக்கு அனைத்தும் கொடுப்பது தாயாக இருந்தாலும், எனக்குப் பிடித்தவற்றை உன்னிடமிருந்து எடுக்கவே என் மனம் முயலுகிறது. உன்னுடைய அரவணைப்பில் இருக்கவே விரும்புகிறேன்.

**"அப்பாவின் அன்பில்**
**ஓர் அழகியல் இருக்கின்றது;**
**அது, மகள்களுக்கு மட்டுமே உரியதாகின்றது.."**

**நாயகனாய் என்னுள் :**

அனைத்து மகள்களுக்கும் தந்தையே நாயகனாய் இருப்பார், சிறிதும் மாற்றம் இல்லை. நீயே என்னுடைய நாயகன்..

என்னுடைய வாழ்க்கையில் இழக்க இயலாத முதல் இடத்தில் நீ மட்டுமே இருக்கிறாய். நீ மட்டும் போதும் நான் செம்மையடைய, நான் ஏன் பெண்ணாக பிறந்தேன்? என ஒரு நேரத்தில் கவலைப்படுவேன், ஏனென்றால், வாழ்நாள் முழுவதும் உன்னுடன் இருக்க முடியாத காரணத்திற்கு, இதில் உதிர்ந்து கிடக்கின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் உயிர் உண்டு, அவை உன்னுடைய அன்பையும், அரவணைப்பையும் என்னுடைய ஏக்கத்தையும் என் காதில் உரக்கச் சொல்லிக்கொண்டே இருக்கும்... உன்னை விட்டுப் பிரியாத வரம் வேண்டுகிறேன்; அடுத்த பிறவிலும் உன்னுடைய மகளாய்ப் பிறக்க...

**நான் குழந்தையாக இருந்து**
**சிறிது காலமாகிவிட்டது;**
**ஆனால், உன்னுடைய குழந்தையாக இருப்பதை**
**ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை.**

– நாயகனின் அன்புமகள்

**முடிவுரை :**

நான் எழுதும் தமிழ் வார்த்தைகளில் ஆகச் சிறந்த மூன்றெழுத்து வார்த்தை " **அப்பா** ".

**பா. யோகேஸ்வரி பாலமுருகன்**
*இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல்*

# கூட்டுக் குடும்ப வாழ்க்கையே சிறந்தது

## குறிப்புச்சட்கம்

- நுழையும் முன்
- முன்னுரை
- பொருளாதாரம்
- வேலை பளு குறைவு
- நல்லொழுக்கங்கள்
- ஓய்வு நேரம்
- குறைந்த செலவு
- சந்தோஷம்
- முடிவுரை



**நுழையும் முன் :**

தற்போதைய இண்டர்நெட் வாழ்வியல் முறையில், சமூக வலைதளங்களில் மட்டும்தான் உறவுகள் கூட்டாக இருக்கின்றன. ஃபேஸ்புக், வாட்ஸ் – அப்களில் குரூப் உருவாக்கி அதில் ஒரு குடும்பமாக வாழ்கின்றனரே தவிர, கூட்டுக் குடும்பமாக வாழ்வது என்பது அதிசயமாக இருக்கின்றது. அதிலும், ஃபிளாட்டுகள் வந்தவுடன் கிட்டத்தட்ட முற்றிலுமாக அழிந்துவிட்டது கூட்டு குடும்ப வாழ்வியல் முறையில் தாத்தா, பாட்டி, பெரியப்பா, மாமா, அத்தை, பேரக்குழந்தைகள் என்ற வாழ்வியல் முறை மிகவும் இன்பமானது ஆகும்.

**முன்னுரை :**

கோடை விடுமுறையில் மட்டுமே ஒன்றாக இருப்பவர்கள் சிலர் இருக்கின்றனர். அதையும் கூட தற்போதைய ஸ்மார்ட் ஃபோன்கள்

கொஞ்சம் கொஞ்சமாகச் சீரழித்து வருகிறது. ஷாப்பிங் மால், பார்ட்டி கிளப், தியேட்டர், பார்க், பீச் இதையெல்லாம் தாண்டி நிறைய சந்தோசங்களும், நன்மைகளும் கொண்ட கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையைப் பற்றி இனிப் பார்க்கலாம்.

**பொருளாதாரம் :**

கூட்டுக் குடும்பத்தில் பொருளாதார ரீதியாக நிறைய நன்மைகள் இருக்கின்றன. பொருட்கள் வாங்குவது, மின்கட்டணம், பொழுதுபோக்குச் செலவுகள், வாடகை என அனைத்திலும் நிறைய பணம் சேமிக்க முடியும்.

**வேலை பளு குறைவு :**

அதே போல வேலை பளு குறைவாக இருக்கும், வீட்டு வேலைகளில் இருந்து, வெளி வேலைகள் வரை அனைத்திலும் சுமை குறைவாக இருக்கும். உதாரணமாக சமையல் செய்வது, வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவது என அனைவரும் மாறிமாறி வேலை செய்வார்கள்.

**நல்லொழுக்கங்கள் :**

கூட்டுக் குடும்பங்களில் வளரும் குழந்தைகளுக்கு மத்தியில் நல்லொழுக்கம் நிறைய இருக்கும். வாழ்வியல் முறை, பந்தம், பற்று, உதவி செய்தல், ஊக்கம் அளிப்பது, பரந்த மனப்பான்மை எனப் பல வகைகளில் குழந்தைகள் சிறந்து விளங்குவார்கள்.

**ஓய்வு நேரம் :**

பெண்களுக்கு நிறைய ஓய்வு நேரம் கிடைக்கும். ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதன் மூலமாக, ஒருவருக்கு உடல்நிலை சரியில்லையென்றால், மற்றொருவர் உதவி செய்வார். எனவே, நன்றாக ஓய்வு எடுக்க முடியும்.

**குறைந்த செலவு :**

எங்கு செல்வதனாலும், எது செய்வதனாலும் ஏற்படும் செலவு

குறைவாக இருக்கும். உதாரணமாக பிக்னிக் செல்வதாக இருக்கட்டும், வெளியூர் செல்வதாக இருக்கட்டும், பண்டிகைகள் கொண்டாடுவதாக இருக்கட்டும், அனைவரும் சேர்ந்து செலவு செய்யும் போது செலவு குறைவாக ஏற்படும்.

**சந்தோஷம் :**

கூட்டுக் குடும்பங்களில் சந்தோஷம் நிறைய இருக்கும், உங்களது சந்தோஷம் மட்டுமின்றி மற்றவர்களது சந்தோசமும் கூட பகிர்ந்து கொள்ள முடியும். அதே போல உங்கள் சந்தோசத்தை பகிர்ந்து கொள்ளும் போதும் அது பன்மடங்கு அதிகரிக்கும்.

**முடிவுரை :**

குடும்பத்தினரின் மன நிலைக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொண்டால், குடும்பத்தில் பிரச்சனை இன்றி அன்பும், அமைதியும் நிலைத்து நிற்கும். பெண்கள் சுய முடிவு எடுப்பதைவிட சமூக அறிவு, அனுபவம் நிறைந்த பெரியவர்களின் அறிவுரை கேட்டால் குடும்பத்திற்கு நல்ல பயன் கிடைக்கும். கூட்டுக் குடும்பத்தில் நம் முகபாவனையைப் பார்த்துப் பெரியோர்கள் நம்மிடம் குறைகள் கேட்டு, தீர்வு சொல்வார்கள். இது தனிக் குடும்பத்தில் இருக்காது. பல சுப நிகழ்ச்சிக்கு கூட்டுக் குடும்பத்தின் பங்களிப்பு மகிழ்ச்சி, தன்னம்பிக்கை அளிக்கும். பிரச்சனையின்றி எந்தக் குடும்பமும் இல்லை. ஆனால் பிரச்சனைக்கு நாம் முக்கிய காரணியாக இல்லாமல் நல்ல தீர்வு கொடுத்தால் குடும்பம் செழிக்கும்.



**க. ஸோனா**

*இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல்*

# பெண் கல்வி

## குறிப்புச்சட்டகம்

முன்னுரை

பெண்களின் தேவை

பண்டைய கால பெண்களின் நிலை

பெண்களின் விழவுகாலம்

பெண்கல்வியின் பயன்கள்

முடிவுரை



**முன்னுரை :**

பெண் என்ற தாய்மையில் தான் உலகில் அனைத்து உயிர்களும் தோன்றுகின்றன. "பெண்கள் நாட்டின் கண்கள்" என்ற வாசகத்திற்கு ஏற்ப நாட்டின் வளர்ச்சிக்கு அறிவியலும், பொருளாதாரமும் எந்த அளவிற்கு முக்கியமோ அதே அளவிற்கு ஒரு நல்ல சமுதாயம் உருவாவதற்குப் பெண்களின் பங்கு இன்றியமையாதது. அப்படிப்பட்ட பெண்களுக்குக் கல்வியைக் கொடுப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதை இன்றைய கட்டுரை பதிவில் பார்க்கலாம் வாங்க. தொட்டிலை ஆட்டும் பெண் கை உலகை ஆளும் சக்தி படைத்தது என்பர் சான்றோர். அத்தகைய சக்தி வாய்ந்த பெண்ணின் கையைப் பலப்படுத்த பெண் கல்வி அவசியமானதாகும்.

**பெண்களின் தேவை :**

உலகப் புகழ் பெற்ற பிரான்ஸ் வீரன் நெப்போலியனிடம் "பிரான்சின் தற்போதைய தேவை என்ன?" என்ற கேள்வி கேட்கப்பட்டது.

"பிரான்ஸ் மட்டுமல்ல எந்த ஒரு தேசமும் முன்னேற பயிற்சி பெற்ற கல்வி அறிவு கொண்ட அன்னையர்களே தேவை" என்று பதில்

சொன்னார். ஒரு பெண்ணே ஒரு குழந்தையின் முதல் ஆசிரியராவார். அந்த பெண் கல்வி அறிவு பெற்றவளாக இருந்தால் மட்டுமே அந்த குழந்தை சமூகத்தில் உயர்ந்த இடத்தை அடைய முடியும்.

**பண்டைய கால பெண்களின் நிலை :**

பண்டைய காலம் தொட்டே பெண்களை வீட்டு வேலை செய்யும் வேலையாளாகப் பார்க்கும் பார்வை இருந்து வந்தது. நாகரீகம் வளர்ந்த இந்தக் கால கட்டத்தில் கூட அத்தகைய எண்ணம் குறைந்த பாடில்லை. அடுப்படியில் அடைந்து கிடைக்கும் கோடான கோடி பெண்களின் வாழ்வை வளம் பெறச்செய்ய கல்வி அறிவு ஒன்றே காரணியாக அமையும். பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளைக் களையவும், புதிய நம்பிக்கையைக் கொண்டிருக்கும் பெண்ணாக அவளை மாற்ற இளமைக்காலம் தொட்டே அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டுதல் அவசியமாகும். பல மேலை நாடுகளைப் போல் நம் நாட்டிலும் அறிவியல் அறிஞர், வானூர்தி ஓட்டுநர், பொறியாளர் என ஆண்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் நம் நாட்டுப் பெண்களும் செய்ய ஆரம்பித்து விட்டனர், இதற்கான முக்கிய காரணியாக இருப்பது பெண் கல்வியே ஆகும்.

கிராமப்புறங்களில் மட்டுமல்லாது நகர்ப் புறங்களிலும் பெண் கல்வியை ஊக்குவிக்கும் செயல்களை நமது அரசு வெகு காலங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது. மகாத்மா காந்தி தொடங்கி பாரதி வரை அனைத்துத் தேசத் தலைவர்களின் முக்கிய செய்தி பெண் கல்வியே ஆகும். ஒவ்வொரு வீட்டிலும் சுதந்திரமற்ற பெண்கள் இருக்கும்போது சுதந்திர நாடாக இருந்த போதிலும் அந்த நாடு சுதந்திரமற்ற நாடாகவே கருதப்படும்.

அனைத்துத் துறைகளையும் ஆண்களுக்கு நிகரான வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு என்று இடம் ஒதுக்கப்படுகின்றன. ஆனால் அதற்கான தகுதியான பெண்கள் கிடைப்பது குறைவாகவே உள்ளது. பட்டம் பயில நகரங்களுக்குச் செல்ல பெண்களுக்கு இருந்த தடைகள் நீங்கினாலும், அவர்கள் கல்வி கற்பதில் பல இடைஞ்சல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

## கட்டுரைகள்

**பெண்களின் விழவுகாலம் :**

இந்திய அரசின் சமீபத்திய கணக்கெடுப்பின்படி 65 விழுக்காடு பெண்களே கல்வி அறிவு பெற்றுள்ளனர். அவர்களையும் விட மேற்படிப்புக்குச் சென்ற பெண்கள் இன்னும் குறைவாகவே உள்ளனர். பெண் கல்வி ஆரம்பிக்கும் பொழுது வரதட்சனைக் கொடுமைகள் போன்ற பெண்களுக்கு எதிரான பழக்க வழக்கங்கள் தாமாக விலக ஆரம்பிக்கின்றன.

**பெண் கல்வியின் பயன்கள் :**

பெண்கள் கல்வி பெற்றதால் இன்றைய உலகில் உள்ள அனைத்துத் துறைகளிலும் பெண்கள் கால்தடம் பதித்துள்ளனர்.

வேலுநாச்சியார், ஜான்சி, அகல்யாபாய், இந்திராகாந்தி, ஜெயலலிதா போன்ற பெண் தலைவர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்து வந்துள்ளனர். ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து வருகின்றனர். முன்பெல்லாம் ஆண்கள் மட்டுமே வருவாய் ஈட்டி வந்து கொண்டிருந்தனர். இப்பொழுது பெண்களுக்குக் கல்வியறிவு கிட்டியதால் பெண்களும் ஆண்களுக்குச் சமமாக வருமானம் ஈட்டுகின்றனர். இதனால் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றுள்ளது.

**முடிவுரை :**

வளர்ந்த நாடுகள் பல பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தேவைகள், சுதந்திரம் பாதுகாப்பு என பெண்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். நாடு மற்றும் வீட்டின் முன்னேற்றத்திற்கும் பெண்கள் கல்வி அறிவு பெற வேண்டும். பெண்களைத் தெய்வமாக வழிபடும் நாம் கல்வி அறிவு பெறவும் செய்வோம். பெண்கள் இந்தச் சமுதாயத்தின் விதைகள் நன்றாக இருந்தால், செடி கண்டிப்பாக வளரந்து கனிகளைத் தரும்.

***வீட்டை அழகாக்கும் பெண்களுக்கு !***
***உலகை அழகாக்க ! பெண் கல்வியை***
***வளர்ப்போம் !***

**பெ. சிந்தியா**
*இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்*

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு



## குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- சுற்றுச்சூழல் அறிமுகம்
- காற்று மாசு
- நீர் மாசு
- நிலம் மாசு
- ஒலி மாசு
- தொழிற்சாலைகளின் கழிவு
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்
- மாணவர்களின் பங்கு
- முடிவுரை

**முன்னுரை :**

இயந்திரமயமான இந்த உலகில் தொழிற்சாலைகள் மற்றும், கைத்தொழில் பேட்டைகள் அதிகரிப்பினால் சுற்றுச்சூழலானது பல்வேறு வகையான பாதிப்புகளிற்கு உள்ளாகின்றது. சுற்றுச்சூழலில் உள்ள இயற்கை வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. எனவே அரிதான அவ்வளங்களை மிகவும் கவனமாகப் பயன்படுத்தி நம் எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். இக்கட்டுரையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பற்றி பார்க்கலாம்.

**சுற்றுச்சூழல் அறிமுகம் :**

சுற்றுச்சூழல் எனப்படுவது எம்மைச் சுற்றியுள்ள இயற்கைப் பரப்பாகும். இவ் இயற்கையானது காடுகள், கடல்கள் மற்றும் பல்வேறு நிலப்பரப்புகளையும் கொண்டமைந்துள்ளது. மேலும் புதுப்பிக்க முடியா வளங்களாகிய கனிமங்கள், எரிபொருட்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இந்த இயற்கைச்சூழலில் பல்வேறுபட்ட உயிரினங்கள், மனிதர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிர்களும் இயற்கையோடு இணைந்து வாழ்வினை வாழ்ந்து வருகின்றன. கணக்கிட முடியாப்

பேருயிர்களையும், சிற்றுயிர்களையும் தன்னகத்தே கொண்டமைந்த இயற்கையைப் பேணிப் பாதுகாத்தால் மட்டுமே பூமியின் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்க முடியும். நாம் வாழும் சூழலானது ஆரோக்கியமான சுற்றுச்சூழலாக இருந்தால் மட்டுமே நீண்ட காலம் நீடித்து வாழ முடியும்.

**காற்று மாசு :**

காற்று மாசுபடுதல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. வாகனங்களும் தொழிற்சாலைகளும் விடும் நச்சுப் புகைகள் வாயுமண்டலத்தில் கலந்து அமில மழைகளை உண்டாக்குகின்றன. இது உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது. மேலும் ஓசோன் படலமும் தேய்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

**நீர் மாசு :**

நீர்நிலைகளில் துணி துவைத்தல், கால் நடைகளைக் குளிப்பாட்டுதல், தொழிற்சாலைக் கழிவுகளைக் கலத்தல் போன்ற செயல்களால் நீரானது மாசடைகின்றது. இதனால் மனிதர்களுக்கு பல்வேறு வகையான நோய்கள் வருகின்றன.

**நில மாசு :**

இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியின் விளைவால் நில மாசு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. நாகரீக முறையில் ஒருமுறை பயன்படுத்தி வீசப்படும் பாலித்தீன் பாக்கெட்டுகளையும் பிளாஸ்டிக் பாட்டில்களையும் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். எப்போதும் மட்காத இப்பொருட்களால் நிலமானது மாசடைகிறது.

**ஒலி மாசு :**

பெருநகரங்களில் ஒலி மாசு அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மனிதனுடைய காதுகள் 120 டெசிபல் அளவு வரையே ஒலியைத் தாங்கும். ஒலி பெருக்கி, மோட்டார் வாகனங்கள், விமானம் போன்றவற்றிலிருந்து வரும் சத்தங்கள் ஒலியை மாசுபடுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. இதனால் மனிதர்களின் கேட்கும் திறன் பாதிப்படைகிறது.

**தொழிற்சாலைகளின் கழிவு :**

தொழிற்சாலைகள் நகரத்தில் மட்டுமின்றிக் கிராமங்களிலும்

பெருகி வருகின்றன. தொழிற்சாலைகள் திட, திரவ, வாயு கழிவுகளைப் பெருமளவில் வெளியேற்றுகின்றன. இதனால் சுற்றுப்புறம் பெருமளவில் பாதிப்படைகின்றது. தொழிற்சாலைக் கழிவுகளால் மனிதனுக்குப் புற்றுநோய், நரம்பு மண்டலம் பாதிப்பு, உடல் உறுப்பு பாதிப்படைதல் போன்ற பல்வேறு இன்னல்கள் வருகின்றன.

**சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம் :**

அதிகரித்து வரும் மாசடைதலானது தாவர மற்றும் விலங்கு உயிர்ப் பல்வகைமையையும், ஏனைய உயிர்களின் நீடித்த தன்மையையும், மனித இனத்தின் வாழ்க்கையையும் கேள்விக் குறியாக மாற்றியுள்ளது. அத்துடன் வேளாண்மை நடவடிக்கைகளின் போது இரசாயனக் கிருமி நாசினிகள், செயற்கைப் பசலைகள் போன்றவற்றை தவிர்த்து இயற்கை உரங்களையும், பூச்சி நாசினிகளையும் பயன்படுத்த வேண்டும். இதனால் நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் இரசாயனங்கள் ஏதுமற்று எமக்கு ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெற்றுத் தரும்.

**மாணவர்களின் பங்கு :**

மாணவர்கள் முதலில் தங்கள் வாழ்விடமான வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல் வேண்டும். தெரு மக்களிடமும் ஊர் மக்களிடமும் சுற்றுப்புறத் தூய்மையை வலியுறுத்தல் வேண்டும். தாங்கள் கல்வி கற்று வரும் கல்வி நிறுவனங்களைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். ஊர்ப்புறங்களில் வைத்துள்ள குப்பைத் தொட்டிகளில் குப்பைகளைக் கொட்டுமாறு அறிவுறுத்த வேண்டும்.

**முடிவுரை :**

அனைத்து உயிர்களின் வாழ்விடமாகவுள்ள சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது அனைவரினது கடமையாகும். சிறுவயது முதலே சிறுவர்களுக்குச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தைக் கற்றுத்தருவதோடு, மக்களிடையே சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். சூழலைப் பாதிக்காத வகையில் எமது செயற்பாடுகளை மேற்கொண்டு இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிப்போமாக.

**மு. ரோகினி தேவி**

*இளங்கலை முதலாமாண்டு கணினி அறிவியல்*

## பொது அறிவு



1. நாம் கண்ணை மூடிக்கொண்டால் தெரியும் நிறம் ?

    விடை : **சாம்பல் நிறம்**

2. கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு எது?

    விடை : **காது**

3. தயிராக மாற்ற முடியாத பால் எது?

    விடை : **ஒட்டகப்பால்**

4. நம் உடலின் போர் வீரன் என்று அழைக்கப்படுவது எது?

    விடை : **இரத்த வெள்ளை அணுக்கள்**

5. நம் உடலில் அதிக கொழுப்பால் ஆன உறுப்பு எது?

    விடை : **மூளை**

6. கண்ணாடிப் பாத்திரங்களை முதலில் உற்பத்தி செய்தவர்கள்?

    விடை : **ரோமன்**

7. நாய்க்கு எந்த நிறம் கண்ணுக்குத் தெரியாது?

    விடை : **சிவப்பு**

8. முகப்பவுடரைக் கண்டுபிடித்த நாடு எது?

    விடை : **இத்தாலி**

9. உலகிலேயே உப்பின் அளவு அதிகம் உள்ள கடல் எது?

    விடை : **சாக்கடல்**

10. ஆண், பெண் வேறுபாடு காணமுடியாத உயிரினம் எது?

விடை : **நத்தை**

11. கோபம் வந்தால் மட்டும் வாலை ஆட்டும் விலங்கு எது?

விடை : **பூனை**

12. மீன்களில் அதிவேகமாக நீந்தும் மீன் எது?

விடை : **சுறாமீன்**

13. இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் உள்ள இடம் எது?

விடை : **கொல்கத்தா**

14. யானை எத்தனை நாட்கள் கருவை சுமக்கும்?

விடை : **600 நாட்கள்**

15. எறும்பின் ஆயுட்காலம் சுமார் எத்தனை ஆண்டுகள்?

விடை : **4 ஆண்டுகள்**

16. இந்திய நேரம் அமெரிக்காவை விட எவ்வளவு மணி நேரம் முன்னதாக உள்ளது?

விடை : **10 மணி 30 நிமிடங்கள்**

17. உலகிலேயே அதிக விமான நிலையங்கள் கொண்ட நாடு எது?

விடை : **அமெரிக்கா**



**ஜா. ஜெனிபர்**
*இளநிலை இரண்டாமாண்டு*
*ஊட்டச்சத்து மற்றும் உணவு மேலாண்மையியல்*

## விடுகதைகள்



1. சட்டையைக் கழற்றினால் சத்துணவு, அது என்ன?

   விடை : **வாழைப்பழம்**

2. கரைந்து போகுது வெள்ளிதட்டு, அது என்ன?

   விடை : **தேய்பிறை**

3. ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி கண்ணீர், அது என்ன?

   விடை : **தேங்காய்**

4. தொட்டுவிட்டால் மூடிக்கொள்ளும், பச்சை மாளிகை ஜன்னல்கள், அது என்ன?

   விடை : **தொட்டா சுருங்கிச்செடி**

5. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான், அது என்ன ?

   விடை : **சோளக்கதிர்**

6. கீழேயும் மேலேயும் மண் : நடுவிலே அழகான பெண். அது என்ன?

   விடை : **மஞ்சள் செடி**

7. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை, அது என்ன?

   விடை : **அகப்பை**

**பா. சாரணி**

*முதுநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்*

1. நிலத்தில் முளைக்காத செடி, நிமிர்ந்து நிற்காத செடி, அது என்ன?

   விடை : **தலைமுடி**

2. உடம்பு முழுவதும் முள், அது என்ன?

   விடை : **சீப்பு**

3. நீ எங்கு சென்றாலும் தொடர்ந்து வருவான், அவன் யார்?

   விடை : **நிழல்**

4. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி, அவள் யார்?

   விடை : **முட்டை**

5. செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே, அவன் யார்?

விடை : **தொலைபேசி**

6. கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான், அவன் யார்?

விடை : **பூரி**

7. உயிர் இல்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு, அது என்ன?

விடை : **பாய்**

8. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான், அவன் யார்?

விடை : **கரும்பு**

9. எத்தனை தடவை சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன?

விடை : **மின் விசிறி**

10. சிறு தூசி விழுந்தாலும் குளமே கலக்கும் அது என்ன?

விடை : **கண்**

11. தாகம் தீர்க்கும் தண்ணீர் சொம்பு, அந்தரத்தில் தொங்குது, அது என்ன?

விடை : **இளநீர்**

12. கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது, அது என்ன?

விடை : **நிழல்**

13. வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக் கொள்வான், அவன் யார்?

விடை : **கத்தரிக்கோல்**

14. அதட்டுவான் அலறுவான் ஆனால் கோட்டையை விட்டு வரமாட்டான், அவன் யார்?

விடை : **நாக்கு**

15. விரல் இல்லாமலே ஒரு கை, அது என்ன?

விடை : **உலக்கை**

16. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ, அது என்ன?

விடை : **சிரிப்பு**

## விடுகதைகள்

17. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள், அவள் யார்?

    விடை : **மெழுகுவர்த்தி**

18. வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை, அது என்ன?

    விடை : **உளுந்து**

19. வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?

    விடை : **பூட்டும் சாவியும்**

**பா. ஷாலினி**

*இளநிலை முதலாமாண்டு கணிதவியல்*

1. இவன் இறக்கை இல்லாமல் பறப்பான், கண் இல்லாமல் அழுவான், அவன் யார்?

    விடை : **மேகம்**

2. உடம்பில்லா ஒருவன் 10 சட்டை அணிந்திருப்பான், அவன் யார்?

    விடை : **வெங்காயம்**

3. யாரும் ஏற முடியாத மரம், கிளைகள் இல்லாத மரம், அது என்ன?

    விடை : **வாழை**

4. ஆயிரம் அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மிட்டாய்கடை, அது என்ன?

    விடை : **தேன்கூடு**

5. ஐந்து அடுக்கு நான்கு இடுக்கு, அது என்ன?

    விடை : **விரல்கள்**

6. அமைதியான பையன் ஆனால் அடிக்காமலேயே அழுவான், அவன் யார்?

    விடை : **ஐஸ்கட்டி**

## விடுகதைகள்

7. உங்களுக்குச் சொந்தமான ஒன்று. ஆனால் உங்களை விட மற்றவர்களே அதிகம் உபயோகிப்பார்கள்?

   விடை : **பெயர்**

8. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம், அது என்ன?

   விடை : **தராசு**

9. ஒன்று போனால் மற்றொன்று வாழாது, அது என்ன?

   விடை : **செருப்பு**

10. ஆடி ஆடி நடந்தான் அமைதியாக அதிர வைத்தான், அவன் யார்?

   விடை : **யானை**

**ம. சுலோச்சனா**

*இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல்*

## பழமொழிகள்



1. மண்ணில் விழுந்த எரி நட்சத்திரம் மீண்டும் வானம் திரும்பாது.
2. சேற்றில் விழுந்த மலர் பூஜைக்கு உதவாது.
3. குருவிக்குக் கொட்டாங்குச்சி தண்ணீரே சமுத்திரம்.
4. சந்தன மரமாக இருந்தாலும் எரிந்தால் கரிக்கட்டையாகத்தான் ஆகணும்.
5. தவளை தாமரைக்கு அருகில் இருந்தாலும் அதற்கு தேன்சுவை தெரியாது.
6. ஆயிரம் காக்காய்க்கும் ஒரு கல்லு போதும்.
7. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.
8. திட்டித் தீர்த்தால் தீரும் பாவம்.

**பா. சாரணி**

*முதுநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்.*

## தெரிந்து கொள்வோம்



| | | |
|---|---|---|
| சிக்கனம் | : | சொற்களில் தொடங்குகிறது |
| வைராக்கியம் | : | உணவில் தொடங்குகிறது. |
| வன்மம் | : | சொல்லில் தொடங்குகிறது. |
| பெருந்தன்மை | : | மன்னிப்பில் தொடங்குகிறது. |
| சான்றாண்மை | : | விட்டுக்கொடுப்பதில் தொடங்குகிறது. |
| பேராசை | : | பணத்தில் தொடங்குகிறது. |
| அன்பு | : | புன்னகையில் தொடங்குகிறது. |
| அழகு | : | தூய்மையில் தொடங்குகிறது. |
| காதல் | : | கண்களில் தொடங்குகிறது. |
| காமம் | : | கற்பனையில் தொடங்குகிறது. |
| கருணை | : | பார்வையில் தொடங்குகிறது. |
| கண்ணியம் | : | மதிப்பதில் தொடங்குகிறது. |
| பரோபகாரம் | : | அண்டை வீட்டோடு தொடங்குகிறது. |
| பண்பு | : | பழகுவதில் தொடங்குகிறது. |
| ஒற்றுமை | : | அனுசரணையில் தொடங்குகிறது. |
| நட்பு | : | பகிர்வதில் தொடங்குகிறது. |
| பாசம் | : | பிரிவில் தொடங்குகிறது. |
| நாணயம் | : | திருப்பித் தருவதில் தொடங்குகிறது. |
| பகைமை | : | குறை காண்பதில் தொடங்குகிறது. |
| சோம்பல் | : | தூக்கத்தில் தொடங்குகிறது. |
| விழிப்புணர்வு | : | தண்ணீரைப் பயன்படுத்துவதில் தொடங்குகிறது. |
| வேகம் | : | சிந்திப்பதில் தொடங்குகிறது. |
| பொறாமை | : | ஒப்பிடுவதில் தொடங்குகிறது. |
| தோல்வி | : | அலட்சியத்தில் தொடங்குகிறது. |
| வீழ்ச்சி | : | ஆவணத்தில் தொடங்குகிறது. |
| ஆரோக்கியம் | : | கருவில் தொடங்குகிறது. |
| ஆத்திரம் | : | இயலாமையில் தொடங்குகிறது. |
| மரணம் | : | ஜனனத்தில் தொடங்குகிறது. |

## தெரிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| வேர் இல்லாத தாவரம் | – | **காளான்** |
| கண் இல்லாத உயிரினம் | – | **மண்புழு** |
| போக்குவரத்துக் காவலர்களே இல்லாத நாடு | – | **நியூசிலாந்து** |
| எலும்புக் கூடு இல்லாத விலங்கு | – | **ஜெல்லி மீன்கள்** |
| துணைக்கோள் இல்லாத கிரகம் | – | **புதன்** |
| பாம்புகளே இல்லாத பகுதி | – | **அட்லாண்டிக் கடல்** |
| காகம் இல்லாத நாடு | – | **சிங்கப்பூர்** |
| நதிகள் இல்லாத நாடு | – | **சவுதி அரேபியா** |
| தோல்வியே இல்லாத கல்லூரி | – | **எங்கள் காவேரி மகளிர் கல்லூரி** |

**த. ஷாலினி**
*இளநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்*

1. அதியமானிடம் நெல்லிக்கனியைப் பெற்று அன்றே ஆண்பெண் நட்பிற்கு வித்திட்டார் – எங்கள் **அவ்வை மூதாட்டியும்** பெண்ணே ...

2. கணவனுக்காக ஒரு ஊரையே எரித்துக் கற்பில் சிறந்து விளங்கியவள் **கற்புகரசி கண்ணகியும்** பெண்ணே ....

3. ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒற்றைப் பெண்ணாக இடம்பிடித்துச் சூடித்தந்த சுடர்கொடியாக விளங்கிய **ஆண்டாளும்** பெண்ணே...

4. பரமசிவனின் கைலாயத்தைத் தன் தலையால் கடந்து பக்தியில் சிகரம் தொட்டு சிவனே அம்மை என்றழைத்த **காரைக்கால் அம்மையாரும்** பெண்ணே ...

5. பரந்தாமனைத் தன் பஜனைப் பாடல்களால் பரவசப்படுத்திய எங்கள் **பக்தை மீராவும்** பெண்ணே ...

6. தீயில் இருந்து உதிர்த்த சூரியனாய் அகிலமே போற்றும் காவியமே பேசும் அளவில் சிறப்புற்ற **திரௌபதியும்** பெண்ணே ...

7. தீக் குளித்து தன் கற்பினை நிரூபித்துக் காட்டிய – எம் **சீதை பிராட்டியும்** பெண்ணே ....

8. தன் தொழிலைத் தவறாது செய்யும் எமனுடன் வாதாடி தன் கணவன் உயிரை மீட்ட **சாவித்திரியும்** பெண்ணே ...

9. ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்று சிலப்பதிகாரம், அதில், அரங்கேற்று காதையில் இடம்பெற்று ஆ ட ல் க லை யி ல் சிறந்தவள் தலைக்கோள் பட்டம் பெற்ற **மாதவியும்** பெண்ணே ...

9. அமுதசுரபி என்ற உணவு கிண்ணம் கண்டெடுத்து உலகில் உள்ளவர் பசியைப் போக்கி அன்னபூரணியாக விளங்கிய **மணிமேகலையும்** பெண்ணே ...

10. கடவுளிடமே நீதி கேட்ட நீதிதேவதை கணவனுக்காக, வஸ்திரம் கொண்டு நேத்திரம் மறைத்த **காந்தாரியும்** பெண்ணே ...

தமிழ் இலக்கியத்திலும், காப்பியத்திலும் அன்றே சிறந்து விளங்கியவர்கள் **பெண்களே** நாமும் அவ்வரியில் இடம்பெறுவோம்.



**புதுமையைப் படைத்து**

**பழமையைக் களைத்து**

**பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்**

**உருவெடுப்போம்.**

**ச. சக்திபிரியா**

*இளநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்*

## சிந்தனைத் துளிகள்

- சந்தோஷம் என்பது அமைவதில்லை. நாம் தான் அமைத்து கொள்ள வேண்டும்.

- நிகழ்காலத்தைச் சரியாக அமைத்துக்கொண்டால், எதிர்காலம் நன்மை தரும்.

- நம் சிந்தனையிலும், வார்த்தைகளிலும் கவனமாக இருக்க வேண்டும்.



- நேற்றைய நினைவுகளை எண்ணி...
  நாளைய கனவுகளைக் கண்டு ...
  இன்றைய சந்தோஷத்தை இழக்காதே ...

- எதிர்பார்ப்பதை விட எதிர்கொள்ளுங்கள்.

- ஆயிரம் உறவுகள் துணையாக இருந்தாலும், வாழ்க்கையைத் தனியாகத் தான் வாழ வேண்டும்.

- தூய்மையான எண்ணம்....
  துணிச்சலான செயல் ....
  வாழ்க்கைக்குத் தேவையானவை.

- ஏமாற்றம் வலியைத் தந்தாலும், வழியையும் தரும்.

- அழகைத் தேடாதீர்கள் வாழ்க்கையில் ....
  வாழ்க்கையை அழகாக மாற்றுங்கள்.

- வாழ்வில் வெல்லும் வரை தேவை தன்னம்பிக்கை ...
  வாழ்வில் வென்ற பிறகு தேவை தன்னடக்கம் ....



**த. யாழினி**
*இளநிலை முதலாமாண்டு நுண்ணுயிரியல்*

# பொன்மொழிகள்

1. வாழ்க்கை என்பது கதைப் புத்தகமல்ல. அது ஒரு விசித்திரமான நாவல்.

   **தாமஸ் புல்லர்**

2. ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்.

   **ஜார்ஜ் ஹெர்பர்ட்**

3. காதல் என்பது மலர்மாலை அன்று : அது நெருப்புப் பொறி. **காண்டேகர்**

4. இலட்சியம் இல்லாமல் வாழ்பவன், வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்வது பொய்.

   **சுக்கிர நீதி**

5. மானம் என்பது படித்துறையற்ற தீவு. அதை விட்டு விட்டால் திரும்பவும் அதனிடம் திரும்பி செல்ல முடியாது.

   **சாக்ரடீஸ்**

6. பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது மிகவும் நல்லது.

   **டேவிட் ஹியூம்**

7. மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும்போது வெற்றிக்கான சரியான பாதையைக் கண்டுபிடித்து விடுவீர்கள்.

   **டாக்டர். ஹில்**

8. நாம் வாழ வேண்டும் என்பது முக்கியமல்ல. வாழ்க்கைக்கு அப்பால் நம் பெயர் பொறிக்கப்பட வேண்டும்.

   **தோரா**



**பா. சாரணி**

*முதுநிலை முதலாமாண்டு தமிழிலக்கியம்.*

# இந்திய சுதந்திரப் போர் ஓர் அறிமுகம்

இந்தியாவிற்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் மிக நீண்ட காலமாகவே தொடர்பிருந்தது. பண்டைய கிரேக்கம் ரோம் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு இருந்தது. அதோடு அலெக்ஸாண்டரின் இந்தியப் படையெடுப்பு, மார்க்கோபோலோ, யுவான் சுவாங், மாஹியான் போன்ற யாத்ரீகர்கள் குறிப்பு, இந்திய மன்னர்களின் படையெடுப்பு போன்றவற்றால் இந்தியா பற்றி மேலை நாடுகளும் கீழை நாடுகளும் நன்கு அறிந்திருந்தன.

கிராம்பு, ஏலம், யானைத்தந்தம், மிளகு, மயில் தோகை, மஸ்லின் துணி போன்ற வணிக பொருள்கள் மேலை நாடுகளில் பிரசித்தி பெற்றவை. 1453 இல் கான்ஸ்டாண்டி நோபில் துருக்கிய வசம் ஆனதால், ஐரோப்பியாவிற்கும் இந்தியாவிற்கான கடல்வழியைக் கண்டுபிடித்தும் ஐரோப்பியரின் வணிகத்தொடர்பு அதிகமானது.

போச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் எனப் பலரும் நாடி வந்த வணிகதேசமாய் இந்தியா விளங்கியது.

இந்த வணிகப் போட்டி அரசியல் ஆதிக்கப் போட்டியாக மாறிட ஆரம்பித்தது. இங்கே இருந்த அரசர்களின் ஒற்றுமை இல்லாமை அவர்களை ஊக்குவித்தது. வியாபாரத்திற்காக வந்தவர்கள் இங்கே ஆட்சியைப் பிடிக்க அவலமும் நேர்ந்தது. இந்த ஆதிக்கப் போரில் ஆங்கிலேயர்கள் அதிக வெற்றியும் பெற்றனர். கோவா - டையூ-டாமன் போர்ச்சுக்கீசியர்கள் வசமும், மாஹீ, ஏனாம், காரைக்கால், பாண்டிச்சேரி, பிரெஞ்சுக்காரர் வசமும், நாகப்பட்டினம், தரங்கம்பாடி டச்சுக்காரர்கள் வசமும் பெரும்பாலான மற்ற பகுதிகள் ஆங்கிலேயர் வசமும் என ஓர் அடிமைச்சங்கிலி இந்தியாவில் பின்னப்பட்டது.

இந்த அடிமைத்தனம் 1947 ஆகஸ்ட் 15 வரை நீடித்தது.

படிப்படியாக ஆங்கிலேயருக்கு எதிராக இங்கே எதிர்ப்பு வலுத்தது. வெறுப்பு வளர்ந்து. மக்கள் மனதில் சுதந்திரதாகம் எழுந்தது. ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிகள் எனத் தொடங்கி, இறுதியில் மக்கள் சக்தி வென்று மகத்தான மக்களாட்சி பிறந்தது.

1857 இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் தான் முதல் இந்திய சுதந்திரப் போர் என அழைக்கப்படுகிறது. அது முதல் 1947 வரை ஏறத்தாழ 90 ஆண்டுகளில் நெடிய போராட்டமே நமது இந்திய சுதந்திரப்போர்.

இங்கே அந்நியர் ஆட்சி என்றால் அது முதன் முதலில் போர்ச்சுகீசியரால் தான் ஏற்படுத்தப்பட்டது. 1510 இல் கோவாவில் இது தொடங்கியது. பிறகு டச்சு, பிரெஞ்சு, ஆங்கில ஆட்சிகள் பல்வேறு இடங்களில் பல கால கட்டங்களில் உருவாகியது. இதற்கும் பல எதிர்ப்புகள் அரசர்களால் தெரிவிக்கப்பட்டாலும், போர் மூலம் வெளிநாட்டவர் வெற்றி பெறும் நிலை ஏற்பட்டது. அவர்களின் நவீன இராணுவமும், தளவாடமும் கூட இதற்கு உதவின எனலாம்.

1857 சிப்பாய்க் கலகத்திற்கு முன்பே 09.06.1806 இல் நடைபெற்ற வேலூர் புரட்சியும் ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு கிளர்ச்சியாகவே கருதப்படுகிறது. பிறகு 1842 இல் வங்காளத்திலும், 1844 இல் சிந்துவிலும், பிறகு பீகார், பஞ்சாப் போன்ற இடங்களிலும் இந்திய சிப்பாய்கள் ஆங்கிலேயருக்கு எதிராகக் கலகங்கள் செய்தனர். இவை ஆங்கிலேய அரசால் ஒடுக்கப்பட்டுத் தோல்வியில்தான் முடிந்தது. 1857 வரை இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி ஆட்சியை நடைபெற்றது. 1857 முதல் இந்திய சுதந்திரப் போருக்குப்பின் விக்டோரியப் பேரரசியின் அறிக்கை மூலம் இந்தியாவின் ஆங்கிலேயே அரசை இங்கிலாந்து நாட்டு அரசே ஏற்றுக் கொண்டது.

அதன் பிறகு ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, பத்திரிக்கை தபால், தந்தி, போக்குவரத்து வசதிகள் மூலம் மக்கள் தொடர்பு அதிகரித்தது. சுதந்திர

தாகம் எழுந்தது. சமூகச் சீர்திருத்தம் வளர்ந்தது. இதன் மூலமாக படிக்க இந்தியர்களிடையே அடிமைத் தனத்தின் மீது வெறுப்பும், சுதந்திர உணர்வும் வளர்ந்தது.

1885 இல் தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் ஆங்கிலேயர் பிரித்தாளும் சூழ்ச்சி, வங்கப்பிரிவினை (1902) திலகர் போன்றவர்களின் வீர முழக்கம் எல்லாம் சுதந்திரப் பயிர் முளைத்து வேரூன்ற துணையாயிற்று. படேல், நேரு, காமராஜ், இராஜாஜி, திருப்பூர் குமரன், வ.உ.சி எனக் காஷ்மீரில் தொடங்கி கன்னியாகுமரி வரை ஆங்கிலேயர் எதிர்ப்பை அதிகமாக்கியது. உப்பு சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம், வரிகொடா இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என்று படிப்படியாக நடந்த சார்வீகப் போராட்டம் இறுதியில் வென்றது. நாடு 1947 இல் ஆகஸ்ட் 15 இல் விடுதலை பெற்றது.

இந்தச் சுதந்திர தாகம் மக்கள் மனதில் எழ பாரதி போன்ற கவிஞர்களின் தியாகம், அவர்கள் சிறையில் பட்ட கொடுமை எல்லாமே காரணமாயின.

இந்த வீர வரலாற்றை விளக்குவதாகவே எதிர்ப்புக் கூரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன் முதல் காந்தியடிகள் வரையில் தேர்தெடுக்கப்பட்ட 50 வீரர்களின் வீர வரலாறு இனி தொடர்கிறது.

இவர்களின் வரலாறு – இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு ஆகும்.

தாயம் விழுந்தால் தான்
ஆடவே ஆரம்பிக்க முடியும்,
காயம் பட்டால் தான்
வாழவே ஆரம்பிக்க முடியும்.



**வெ. காவியா**
*இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல்*

# ஓவியங்கள்



**ஏ. ஏஞ்சலின்**

*இளநிலை வணிக நிர்வாகவியல்*



**ர. பவதாரணி**

*இளநிலை கணினி அறிவியல்*



**பெ. அனுஷா**

*இளநிலை முதலாமாண்டு கணிதவியல்*

# ஓவியங்கள்



**ந. தர்ஷினி**

*இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல்*




**மு. மௌனிகா**

*இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல்*




**ரா. விஜயசங்கரி**

*இளநிலை இரண்டாமாண்டு*
*தகவல் தொழில்நுட்பவியல்*

## ஓவியங்கள்





**ஸ்ரீ. ஸ்ரீதேவி**

*இளங்நிலை முதலாமாண்டு*
*கணினி அறிவியல் அறிவாற்றல்*

**கே. சஸ்மிதா**

*இளநிலை முதலாமாண்டு*
*கணினி அறிவியல் அறிவாற்றல்*



**கு. கிருஷ்ணபிரியா**

*இளநிலை முதலாமாண்டு*
*கணினி அறிவியல் அறிவாற்றல்*



எப்போதும்

கர்வத்துடன் இரு!

இங்கு

யாரும் யாருக்கும்

சளைத்தவர்கள்

அல்ல!!

**கு. கிருஷ்ணபிரியா**

*இளநிலை முதலாமாண்டு கணினி அறிவாற்றல்*




**ஜெ. ஹரிணிஸ்ரீ**

*இளநிலை முதலாமாண்டு கணிதவியல்*

## ஓவியங்கள்




**அ.நெ.நந்தனா**

*இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்*



**இர. கனகசுபிக்ஷா**

*இளநிலை முதலாமாண்டு கணிதவியல்*



**எதையும் தாங்கும்
பூமாதேவியின் மறுஉருவமே
பெண் .... !**

**ச. ரசிகா**
*இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்*



**ச. காயத்திரி**
*இளநிலை முதலாமாண்டு வணிகவியல்*

## ஓவியங்கள்




**காக்கை குருவி எங்கள் சாதி !** – பாரதியார்

**யோ. காவ்யா**
*இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல்*




**நதியா**
*இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்*

## ஓவியங்கள்



**ம. தீபிகா**
*இளநிலை முதலாமாண்டு*
*வணிகவியல்*



**ச. இனியா**
*முதுகலை முதலாமாண்டு*
*தமிழிலக்கியம்*